# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
# பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2024/2025
***www.ugc.ac.lk***

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிகோரும் பொருட்டு **2024 கல்வியாண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில்** ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகளை திருப்தி செய்துள்ளனரா என்பதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

**பல்கலைக்கழக அனுமதிக்கு இணைய வழி ஊடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.**

## பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகள்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானோர் என அறிவிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள்,

(அ) அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் குறைந்தது சாதாரண சித்தி (S)களை ஆகக் கூடுதலாக 3 அமர்வுகளுள் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு 1: **பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் Z புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.**

**அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தேவையை முந்திய தடவையில் அதாவது க.பொ.த. (உ/த) பரீட்சையின் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்று பூர்த்தி செய்திருப்பின், அவ்விண்ணப்பதாரி தற்போது தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை உரிய பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்காக பதிவு செய்வதற்குத் தகுதி பெறுவர்.**

**ஏற்கனவே அனுமதிக்குத் தெரிவாகி பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ளாத மாணவரொருவர் அடுத்துவரும் பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் பொது சாதாரண வினாத்தாள் பரீட்சையில் தோற்றி குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்தால் மட்டுமே z புள்ளிகளின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை எதிர்வரும் கல்வியாண்டொன்றில் குறித்த பல்கலைக்கழகத்தில் தொடர்வதன் பொருட்டு பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.**

## 2024/2025 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேட்டினை பெற்றுக்கொள்ளும் முறை

2024/2025 ம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலொன்றை, கீழ்வரும் முறைகளில் ஒரு கைநூலிற்கு ரூபா. 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகம், இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07.

ஆ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட விநியோக முகவர்களிடமிருந்து (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ள விநியோக முகவர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது) பெற்றுக்கொள்ளமுடியும்.

இ. பல்கலைக்கழக அனுமதிக் கைநூலினை தபால் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதற்காக வேண்டி இலங்கை வங்கியின் ரொறிங்ரன் கிளையிலுள்ள ப.மா.ஆ. திரட்டுக் கணக்கு இலக்கம் 0002323287 இன் அல்லது மக்கள் வங்கியின் நகர மண்டபக் கிளையிலுள்ள திரட்டுக் கணக்கு இலக்கம் 167-1-001-4-3169407 இற்கு வரவு வைக்கும் விதமாக, இலங்கை வங்கியின் அல்லது மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் ஒவ்வொரு கைநூலுக்கும் ரூபா 1000/- இனைச் செலுத்தி பெற்றுக்கொண்ட கொடுப்பனவு பட்டோலை, அனுமதிக் கைநூலிற்கான எழுத்து மூல வேண்டுகோளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும், குறித்த பணத்தை செலுத்தியமைக்கான வங்கியின் இலட்னை பொறிக்கப்பட்டு அதிகாரமுடைய அலுவலர் ஒருவரினால் கொடுப்பனவு பட்டோலையில் முறையாக ஒப்பமிடப்பட்டிருக்கவும் வேண்டும்.

அவ்வாறு வங்கிக் கொடுப்பனவுப் பட்டோலையை அனுப்பி அனுமதிக் கைநூலினை தபால் மூலமாகப் பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் விண்ணப்பதாரி. பெற விரும்பும் அனுமதிக் கைநூலின் மொழிமூலம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சுய முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான 37செ.மீ x 26செ.மீ அளவுக்குக் குறையாத கடிதவுறையொன்றுடன் எழுத்து மூல கோரிக்கையொன்றினை பிரதிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு விண்ணப்பதாரி அனுப்பி வைத்தல் வேண்டும்.

**இணையவழி மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முறை**

**பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலம் www.ugc.ac.lk எனும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.**

குறிப்பு 2 : **விண்ணப்ப நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2024/2025 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 4 இனை வாசிக்குமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.**

குறிப்பு 3 : **இணைய வழியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் 2024/2025 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 5 இல் தரப்பட்டுள்ளது.**

குறிப்பு 4 : **இணையத்தள வசதியற்ற விண்ணப்பதாரிகள், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சின் கீழுள்ள நாடெங்கிலுமுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (OUSL R&SC), இணைய தொழில்நுட்ப தொழலக்கற்றல் மையம் (ITDLH) நிலையங்களுளொன்றுக்கு அவர்களது அலுவலக நேரங்களில் சென்று எதுவித கட்டணமுமின்றி (இலவசமாக) பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையங்கள் பற்றிய விபரம் 2024/2025 ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் பகுதி 5 இன் இறுதியில் தரப்பட்டுள்ளது.**

குறிப்பு 5 : **பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை விண்ணப்பதாரிகள், கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.**

குறிப்பு 6 : **பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி விண்ணப்பத்தை நிரப்புவதில் சிரமங்கள் ஏதும் ஏற்படின் அரச தகவல் நிலையத்தினைத் (1919) அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல் நிலையத்தினைத் (011-2695301, 011-2695302) தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெறலாம்.**

**இணையவழி விண்ணப்பங்களை கோருவதற்கான ஆரம்பத்திகதி**

கல்வியாண்டு 2024/2025க்கான பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்க்கான வாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு **09.05.2025** ஆம் திகதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்க்கான இறுதித் திகதி**

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்க்கான இறுதித் திகதி 30.05.2025 ஆம் திகதி ஆகும். குறித்த 30.05.2025 ஆம்** திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என பரீட்சார்த்திகள் அனைவரும் அறிவிக்கப்படுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து, இணையவழி விண்ணப்பத்தொகுதியிலிருந்து பெறப்படும் இணையவழி விண்ணப்பப்படிவ அச்சுப்பிரதியை **பிரதிச் செயலாளர் / பல்கலைக்கழக அனுமதிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு – 07** என்று முகவரியிட்டு பதிவுத் தபால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் A4 தபாலுறையிலிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.**

அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வருகைதந்து விண்ணப்பத்தை நேரில் கையளிக்க முடியாது.

**பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூல் கல்வியாண்டு 2024/2025 பிரிவு 1.7 இற்கு அமைய பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தகுதியற்றோராவார்.

1. க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள்.

2. 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் கற்கைநெறியொன்றிற்கு உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள். [இப் பந்தியின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பெயர்கள் 2024/2025 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 1.6(8) மற்றும் 1.6(10) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது]

3. 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டம் அல்லாத ஏனைய பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது ஏனைய உயர்கல்வி நிறுவனமொன்றில் முதல் பட்டப்பயில் நெறிகளுக்காக இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   அவையாவன:

   i. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
   ii. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
   iii. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (As Enlisted Officer Cadets)
   iv. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
   v. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (2017 ஆண்டிலும் அதன் பின்னரும் பதிவு செய்த மாணவர்கள்)

4. கல்வியியற் கல்லூரி (College of Education) ஒன்றில் கற்கைநெறியொன்றினை தொடர்வதற்காக உள்வாரி மாணவர்களாக பதிவு பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

5. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

6. கீழே பந்திகள் **"முக்கியம்"** என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களில் 03 வருடங்கள் அல்லது அதற்கதிகமான காலப்பிரிவிற்கு கீழ் காட்டப்பட்டிருக்கும் கற்கை நெறியொன்றைப் பயில்வதற்கு முழுநேர மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   (அ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி. - HND)

   (ஆ) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA), எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (IET), இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (இ.வி.தே.டி - NDES)

**முக்கியம் :**

ஆயினும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி.-HND) அல்லது / அத்துடன் தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி-NDES) ஆகிய மூன்று வருட கால அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தினைக் கொண்ட முழுநேர கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவரொருவர் தமக்கு இந்நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித்தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவினை மீளப்பெற்றுவிட்டால் மாத்திரமே பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் 16ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

மேலே பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறியொன்றிற்குப் பதிவுசெய்த மாணவரொருவர், பதிவுசெய்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதித்திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவை மீளப்பெறாவிட்டால், அவர் மேலே பந்தி 6 இல் குறிப்பிட்ட பிரிவில் வருவதுடன் பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கை நெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

ஆயினும், மேலே குறிப்பிட்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி.-HND) அல்லது தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி-NDES) ஆகிய கற்கைநெறிகளுக்கு **வெற்றிடங்களை நிரப்புவதற்காக** மேலே பந்தி 6 இல் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 60 நாட்களுக்குள் பதிவினை மீளப்பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான சலுகை வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு 7: **மேலே பந்தி 6 இல் குறிப்பிட்ட ஓர் கற்கை நெறிக்கு பதிவுசெய்வதற்காக கொடுக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிறுவகமொன்றிலிருந்து பதிவை மீளப்பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பத்துடன் குறித்த நிறுவனத்தில் பதிவை மீளப்பெற்றமை தொடர்பான கடிதத்தின் பிரதியையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.**

7. முதலாவது பட்டமட்டத்தில் கற்கை நெறியொன்றைக் கற்பதற்கு உயர் கல்வி அமைச்சினூடாக வழங்கப்பட்ட வெளிநாட்டுப் புலமைப் பரிசிலொன்றை ஏற்றுக்கொண்ட மாணவர்கள்.

8. மேலே 2,3,4,5,6 மற்றும் 7 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளிலிருந்து முதல் பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்.

9. தற்போதைய கல்வியாண்டில் அல்லது முன்னைய கல்வியாண்டு ஒன்றில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது தவறான பிரகடனங்களைச் செய்த மாணவர்கள் / மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள்.

குறிப்பு 8: **பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட முன்னர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானவை / தவறானவை எனக் கண்டறியப்பட்டால் அக் கல்வி ஆண்டிற்கான அவரின் தேர்வு மற்றும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுவதுடன் ஏனைய எவ் எதிர்கால கல்வியாண்டிலும் மீண்டும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.**

**மேலும், பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பிற்பாடு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானவை / தவறானவை என எவ்விதத்திலாவது கண்டறியப்பட்டால் அம்மாணவரை பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.**

**இதர முக்கிய தகவல்கள்**

**a. முந்தைய கல்வியாண்டின் (அதாவது 2023/2024 கல்வியாண்டின்) வெட்டுப்புள்ளிகள்**

முந்தைய கல்வியாண்டின் (அதாவது 2023/2024 கல்வியாண்டின்) வெட்டுப்புள்ளிகளை பிரிவு 9இன் கீழ் https://ugc.ac.lk/handbook/ வழியாக அணுக முடியும்.

இவ் வெட்டுப்புள்ளிகள் பல்வேறு கற்கைநெறிகளுக்கான தேவை முறை குறித்த ஒரு யோசனையை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குவதற்காக மாத்திரமே வழங்கப்படுகின்றன. குல்வியாண்டிற்கு இணங்க வெட்டுப்புள்ளிகள் மாறுபடலாம் என்பதால், தீர்மானம் எடுக்கும் போது 2023/2024 கல்வியாண்டிற்காக வெளியிப்பட்ட வெட்டுப்புள்ளிகளில் தங்கியிருக்க வேண்டாம். இவ் வெட்டுப்புள்ளிகள் 2024/2025 கல்வியாண்டில் வெளியிடப்படும் வெட்டுப்புள்ளிகளில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தமாட்டாது.

**b. விண்ணப்பத்தில் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான விருப்பொழுங்கைக் குறிப்பிடுதல்**

2024/2025 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற 16 தேசிய பல்கலைக்கழகங்களினாலும், 2 வளாகங்களினாலும் 2 உயர்கல்வி நிறுவனங்களினாலும் 126 வெவ்வேறு கற்கைநெறிகள் நடாத்தப்படுகின்றன.

குறித்தவொரு பல்கலைக்கழகத்தினால்/ வளாகத்தினால்/ நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறி ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடுகள் **"யுனி கோட்" (Uni-Code)** என அழைக்கப்படும். மொத்தமாக 261 "யுனி கோட்" (Uni-Code) கள் உள்ளன. "Uni-

Codes''களின் பட்டியல் 2024/2025 ஆம் கல்வியாண்டிற்குரிய கையேட்டின் **139-146ம்** பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாம் தகுதி பெற்றுள்ள எவ்வளவு எண்ணிக்கையான யுனி-கோட்களுக்கும் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கைநெறிகள் எத்தனைக்கும்) விண்ணப்பிக்க முடியும். மாணவர்கள் சகல 261 ''Uni-Codes'' களுக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறமாட்டர். விண்ணப்பதாரியினது யுனி-கோட் (Uni-Code) தெரிவுகள் அவர் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் அமையும். ஆயினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தில் ஆகக்கூடுதலாக 125 தெரிவுகள் வரை குறிப்பிடலாம்.

அவர்கள் தங்கள் ''Uni-Code'' களை அதிகூடிய விருப்பு யுனி-கோட் இலிருந்து அதிகுறைந்த விருப்பு யுனி-கோட் வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்குபடுத்தலானது, மாணவனது மனதில், யுனி-கோட்களில் உள்ள ஆர்வம் குறைந்து செல்லும் வரிசையைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். மாணவர்கள் தமது விருப்பொழுங்கில் ஒரே யுனி-கோட்டை (Uni-Code) ஒரு தடவைக்கு மேல் பதிய அனுமதிக்கப்பட மாட்டர்.

**தெரிவின் போது கற்கைநெறியும் பல்கலைக்கழகமும் ஒன்றாகவே கருத்திற்கொள்ளப்படும்.**

மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தை நிரப்பும் போது தாம் தகுதிபெறுகின்ற ஆகக் கூடிய எண்ணிக்கையான யுனி-கோட்களைக் குறிக்குமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் தாம் விருப்புரிமை வழங்கிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுவர். **விண்ணப்பதாரியெவரும் அவர் வேண்டிக்கொள்ளாத (விண்ணப்பிக்காத) யுனி-கோடொன்றுக்கு (Uni-Code) அனுமதிக்கப்படமாட்டார்.** இதன்படி, குறித்தவொரு பல்கலைக்கழகத்தின் குறித்தவொரு கற்கைநெறிக்கு அனுமதி பெறப் போதுமான z-புள்ளியை விண்ணப்பதாரியொருவர் பெற்றிருப்பினும், அவ்விண்ணப்பதாரி அதற்குரிய யுனி-கோட்டைத் தனது விண்ணப்பத்தில் கோரியிராதவிடத்து, அந்த யுனி-கோட் (Uni-Code) (அதாவது அதற்குரிய பல்கலைக்கழகமும் கற்கைநெறியும்) அவ்விண்ணப்பதாரிக்கு வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர் தனது விருப்பொழுங்கில் அடுத்த தெரிவாகக் குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் (''Uni-Code'') அனுமதிக்கப்படுவது பற்றியே பரிசீலிக்கபடுவார்.

குறிப்பு 9: **''யுனி-கோட்'' களை பயன்படுத்தி விருப்பொழுங்கைக் குறிப்பிடுவது தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2024/2025 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பகுதி 3 ஐ வாசிக்குமாறு மாணவர்கள் ஆலோசனை கூறப்படுகின்றனர்.**

குறிப்பு 10: **தெரிவுசெய்யப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு (Uni-Code) மாணவர் ஒருவர் பதிவு செய்யாது விடின், எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் அதே கற்கைநெறியை வேறு பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு மாணவரது விண்ணப்படிவத்தில் அவற்றிற்கு உயர் தெரிவு வழங்கப்பட்டிருப்பினும் அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டார். பதிலாக, அவர்களது விண்ணப்பத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள கற்கைநெறியிற்கு அவர்கள் கருத்தில் கொள்ளப்படுவர்.**

**கல்வியாண்டு 2024/2025 க்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் பக்கம் 112-113 இல் வழங்கப்பட்டுள்ள ''முக்கியம்'' எனும் பகுதியை படிப்பதன் மூலம் மாணவர்கள் இது தொடர்பில் மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.**

**c.** <u>செயன்முறை/ உளச்சார்பு பரீட்சை சித்தி பெறுவதற்கான தேவைப்பாடு</u>

கீழே பட்டியலிடப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறல் பற்றி பரிசீலிக்கப்பட விரும்பும் பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால் / உயர்கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் செயன்முறை/ உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டும். **சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனம் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும் என்பதுடன் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் நேரடியாகவே உரிய பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

**பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் அல்லது நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் / உயர்கல்வி நிறுவனங்களின் தொலைபேசித் தொடர்பு இலக்கங்கள் பக்கம் 197 இல் தரப்பட்டுள்ளது.எவ்வாறாயினும், குறித்த கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை / உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கைநெறியின் வெட்டுப் புள்ளித் தேவைப்பாட்டினைப் ”ர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.**

| **கற்கைநெறி** | **பல்கலைக்கழகம்/வளாகம்/நிறுவகம்** | **Uni Code** |
|---|---|---|
| கலை (SP) - வெகுசன ஊடகம் | கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம் | 020S |
| கலை (SP) - அரங்கேற்றல் கலை | கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம் | 041S |
| கட்டடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 023G |
| வடிவமைப்பு | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 024G |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 034G |
| இசை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 068C |
| இசை | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 068E |
| இசை | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 068Y |
| இசை | கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 068Z |
| நடனம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 069E |
| நடனம் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 069Y |
| நடனம் | கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 070E |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 071Z |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம் | 072Y |
| உடற்றொழில் கல்வி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 081E |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் | 082D |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 082L |
| கட்புலக் கலை | கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 085Z |
| நிலத்தோற்றக் கட்டிடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 097G |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 100D |

**d. <u>தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு பதிவினை மேற்கொள்ளல்</u>**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2024/2025 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த z-பெறுபேறுகள் (வெட்டுப்புள்ளிகள்) வெளியிடப்பட்ட பின், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும். பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.6(5), 1.6(6), மற்றும் 4.1 ஆம் பந்திகளுக்கமைய, மாணவன் தரப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யின், வங்கியில் அல்லது இணையவழி ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக் கட்டணமான ரூபா 50/- இனை வரவுவைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் தாம் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்தல் வேண்டும்.

மேலும் இணையத்தினூடாக பதிவு செய்யும் போது வங்கி மூலமாக கட்டணம் செலுத்தப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட கட்டணப் பற்றுச்சீட்டு பதிவேற்றப்பட்டு (Upload) உறுதி செய்துகொள்வதன் பொருட்டு இணையத்தினூடாக ப.மா.ஆ. இற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இணையதளத்தில் பதிவு செய்த பின்னர், அச்சுப்பிரதி செய்யப்பட்டு சரியான முறையில் ஒப்பமிடப்பட்ட இணையதள பதிவுப் படிவத்துடன் (Online Payment Receipt) வங்கியில் செலுத்தியிருப்பின்

தேவையான கொடுப்பனவை செலுத்தியமைக்கான அத்தாட்சி பத்திரத்தின் [Paying-in-Voucher] இனையும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

குறிப்பு 12 : **தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி, பல்கலைக்கழகத்திற்கு இணையவழி ஊடாக பதிவுசெய்தலும் 2024/2025ம் கல்வியாண்டிற்குக் கட்டாய தேவையாகும் என்பதை கருத்தில் கொள்க.**

குறிப்பு 13 : **தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையத்தினூடாக பதிவு செய்து முடிக்கும் போது மாணவர்கள் பகிடிவதையிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான பகிடிவதை எதிர்ப்பு பிரகடனம் ஒன்றினைத் தரவிறக்கி அதனை (இருபுறமும்) A4 அளவிலான தாளில் அச்சிட வேண்டும். பதிவு செய்யும் போது முறையாக கையொப்பமிடப்பட்ட பிரகடனத்தினை பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். தயவுசெய்து இந்தப் பிரகடனத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தபால் மூலம் அனுப்ப வேண்டாம்.**

**e. பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில்** (www.ugc.ac.lk) **வெளியிடப்பட்ட காணொளியைப் பார்த்து பல்கலைக்கழக விண்ணப்பத்தை ஆன்லைனில் நிரப்புவது குறித்து சரியான புரிதலைப் பெறவும் மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**2024/2025ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விநியோக முகவர்கள்**

01. கொழும்பு - எஸ். கொடகே அன்ட் பிரதர்ஸ், 675, மருதானை வீதி, கொழும்பு 10.
சதீபா புத்தக நிலையம், 1060, மருதானை வீதி, பொரல்லை, கொழும்பு 08.
விஜிதா யாபா புத்தக நிலையம், 130, எஸ்.டீ.எஸ். ஜயசிங்க மாவத்தை,கொகுவல, நுகேகொட.
விஜிதா யாபா புத்தக நிலையம், யுனிட்டி பிளாஸா, 02, காலி வீதி, கொழும்பு 04.
விஜிதா யாபா புத்தக நிலையம், 32, தேர்ஸ்டன் வீதி, கொழும்பு 03.
விஜிதா யாபா புத்தக நிலையம், G 6 A, கிரஸ்கட் பொல்வாட், கொழும்பு 03.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 30, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 44/9, வை.எம்.பீ.ஏ. கட்டடம், கோட்டே.
சரசவி புத்தக நிலையம் (கடை), 70/1/5, வை.எம்.பீ.ஏ. கட்டடம், பொரல்லை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 74, ஹைலெவல் வீதி, மஹரகம.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 92A, பாராளுமன்ற வீதி, பொலவத்த , பத்தரமுல்ல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 592, மருதானை வீதி, கொழும்பு 10
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்)லிமி.,4ஆம் மாடி, வன் கோல்பேஸ் மால் ,கொழும்பு 02
சரசவி நிலையம் (பிரைவேற்) லிமி., 02, ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 02 B, சமுத்ராதேவி மாவத்தை, நுகேகொட.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 24, ஹில் வீதி, தெஹிவல.
சரசவி நிலையம் 20A, ஹில் வீதி, தெஹிவல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 70/1/2, Y.M.B.A. கட்டிடம், கொழும்பு 8.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 14, உத்யான வீதி, பிலியந்தல
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., இல. 47, இக்கொனமிக் சென்டர், நாரஹேன்பிட்டி.

சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 147, புனித. மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., மகளிர் கல்லூரி, இல. 66, ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7.
சரசவி புத்தக நிலையம், 16 ஹோரன வீதி, பாதுக்க.
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, இல. 413, பௌத்தலோக மாவத்த, கொழும்பு 07.
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, 1/50, வை.எம.பி.எ கட்டடம், பொரல்ல
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, 82, மொறட்டுவ வீதி, பிலியந்தல
சரசவி புத்தகசாலை(பிறைவட்)லிமி, 175, ஹொரண வீதி, கொட்டாவ, பன்னிபிடிய
சசிரி பிரைவேற் லிமி., 14, ஹைலெவல் வீதி, மஹரகம.
சரசவி மார்கெட்டிங் என்டர்பிரைசஸ்,UG 19, பீப்பிஸ் பார்க், குணசிங்கபுர, கொழும்பு 11.
பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, கொழும்பு 11.
துசித்த புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 433 Q, காலி வீதி, ரத்மலானை.
சித்துறுவன புத்தக நிலையம், 08, இங்கிரிய வீதி, பாதுக்க.
விக்டரி புத்தக நிலையம், 21, யட்டியான்தோட்ட வீதி, அவிசாவலை.
சனிலா புத்தகசாலை, 323, கடுவெல வீதி, பத்தரமுல்ல.
சதரகா புத்தக நிலையம், 09, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
சீவலி புத்தக நிலையம், A/39, குறுக்கு வீதி, ஹன்வெல.
சித்துமின புத்தக நிலையம், 62, பிரதான வீதி, அதுருகிரிய.
சமுத்ரா புத்தக நிலையம், இல. 1141, மருதானை வீதி, பொரெல்ல.
நலன்புரி சங்கம், ப.மா.ஆ., இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07.
சந்தலி புத்தக நிலையம், 76/4, சேனாநாயக்க கட்டிடத் தொகுதி, ஹோமாகம.
ஸ்டைலீஸ் புத்தக நிலையம், 18/B, டி மெல் லேன், மொரட்டுவ.
ஸ்ரீ லங்கா புத்தக நிலையம், இல. 27, பிரதான வீதி, பிலியந்தல
ஒனேரோ பொத் மெதுர, 87 ஹைலெவல் வீதி, மஹரகம.
விதுலக கல்வி வெளியீடு (பிரைவேற்) லிமி., 50/22, மஹமேக வத்தை, மஹரகம.
கிரந்தாலோக அச்சகம் மற்றும் புத்தக நிலையம், 12, ஹைலெவல் வீதி, கொட்டாவ, பன்னிபிட்டிய.
நியு கயான் புத்தக நிலையம், இல. 14, ஹைலெவல் பிளாசா டெல்கந்த,நுகேகொட.
லும்பினி பொத்த மதுர, இல. 17, சரனபால ஹிமி மாவத்த, பிலியந்தல.
நியு சேனாதீர புத்தக நிலையம், இல. 13, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
திநென புத்தக நிலையம், 28/C, ஸ்டேஷன் வீதி, ஹோமாகம.
ஆசிரி புத்தக நிலையம், இல. 10, பாதுக்க வீதி, ஹோடகம, ஹோமாகம.
சிதுருவன புத்தகசாலை(பிறைவட்)லிமி, 61, பிரதான வீதி, ஹங்வெல்ல
சிதுருவன புத்தகசாலை(பிறைவட்)லிமி, 112, ஹய் லெவல் வீதி, மீப்பே சந்தி, பாதுக்கை
சிதுருவன புத்தகசாலை(பிறைவட்)லிமி, 20, எம்.டி.எச்.ஜயவர்தன மாவத்தை, ஹொரன வீதி, பாதுக்கை
மெக்மிலன் புத்தகசாலை, 195, ஒல்கோட் மாவத்தை, கொழும்பு 11
சுசார வெளியீடுகள்(பிறைவட்)லிமி, 180/43, பீபள்ஸ் பார்க், கொழும்பு 11
சுசார வெளியீடுகள்(பிறைவட்)லிமி, 65, மாகொல வீதி, கிரிபத்கொட
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 217, ஒல்கொட் மாவத்த, கொழும்பு 11.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 27, காலி வீதி, பம்பலபிட்டிய.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 1129, மருதானை வீதி, கொழும்பு 08.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 04, கண்டி வீதி, , கிரிபத்கொட.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 133D, வஜிர வீதி, கொழும்பு 05.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 20, சென் செபஸ்டியன் மலை, கொழும்பு 12.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 73, இரத்தினபுர வீதி, அவிசாவல்ல.
சந்ர அச்சகம், இல. 89, ஹொரன வீதி, பிலியந்தல.
சந்ர அச்சகம், இல. 13, ஹொரன வீதி, பொல்கஸ்சோவிட்ட.
நிக்கோலி அச்சகம், இல.62, தெஹிவல வீதி, மஹரகம.
சிதுமின புத்தக நிலையம், 8A, கொடகம வீதி, அதுருகிரிய.

லுமினேக்ஸ் (பிரைவேற்) லிமி., 646, காலி வீதி, மொறட்டுவ
லுமினேக்ஸ் (பிரைவேற்) லிமி., இல.91/B, ஹொரன வீதி, பிலியந்தல.
சந்தலி புத்தக நிலையம், சந்தலி புத்தக நிலைய நகரம், இல. 60, கட்டுவன வீதி, ஹோமாகம
சந்தலி புத்தக நிலையம், புதிய சந்தலி புத்தக நிலையம், கட்டுவன, ஹோமாகம
சமனல ரீட்ரய்ட் (பிறைவட்)லிமி., இல.494, இரண்டாம் குறுக்குத் தெரு, மருதானை

02. கம்பஹா - சாந்தி புத்தகசாலை, 50, பிரதான வீதி, கம்பஹா.
கே.ஏ. ஆரியதாஸ அன்ட் கொம்பனி, 32, பிரதான வீதி, வேயன்கொட.
சம்பத் பாலித டீ சேரம் புத்தக நிலையம், 60, சம்பத் நிதி கட்டிடம், கண்டி வீதி, கிரிபத்கொட
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 87, மினுவன்கொட வீதி, கம்பஹா.
விஜிதா யாபா புத்தக நிலையம், 135, ராஜபக்ஷ புரோட்வே, நீர்கொழும்பு.
றோஹன புத்தக நிலையம் மற்றும் ஹார்ட்வேர் ஸ்டோர்ஸ், புதிய கண்டி வீதி, தெல்கொட.
டிலீப்பா புத்தக நிலையம், இல. 07, பஸ்யால வீதி, மீரிகம.
கங்கா புத்தகசாலை, 134, கண்டி வீதி, நிட்டம்புவ.
சரசவி புத்தக நிலையம், இல.36, பிரதான வீதி, கம்பஹா.
பேர்னோ ஸ்டேசனர்ஸ், இல.92, நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
சரசவி புத்தக நிலையம், இல.37, மீரிகம.
மஹஜன புத்தக நிலையம், 141, சேரம் கட்டடம், கண்டி வீதி, கடவத்த.
ஆசிரி டிரேடர்ஸ், 18, குருநாகலை வீதி, மினுவங்கொட.
திஸ்னா புத்தக நிலையம், 650, அத்தனகல வீதி, நிட்டம்புவ.
வன்மினி புத்தக நிலையம், 20/5, பஸ்யால வீதி, மீரிகம.
மின்சர புத்தக நிலையம், 12, வாடி வீட்டு வீதி, கம்பஹா.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 134A, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 151/1, கண்டி வீதி, கிரிபத்கொட.
பொன்சேகா புத்தக நிலையம், 77, சிலாபம் வீதி, கொச்சிக்கடை.
புதிய ஆசிரி புத்தக நிலையம், இல 18, திவுலபிட்டிய வீதி, மினுவங்கொட
ஜயந்தி புத்தக நிலையம் மற்றும் ஸ்டேசனர்ஸ், கம்பஹா வீதி, கிரிந்திவெல
சமனல ரீட்ரய்ட் இன்டனசனல்(பிரைவேட்) லிமி., 19, சிரிவர்த்தன மாவத்த, மினுவங்கொட
சமனல ரீட்ரய்ட் இன்டனசனல்(பிரைவேட்) லிமி, இல 136, நீர்கொழும்பு வீதி, நாகொட, கண்டான.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, 7B, மங்கள வீதி , கம்பஹா.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 64, டீ குரூஸ் வீதி, நீர்கொழும்பு.
விஜிதா யாபா புத்தக நிலையம், நீர்கொழும்பு அச்சகம், நீர்கொழும்பு.
சொனாலி புத்தக நிலையம் & பியுட்டி கேயார், இல 24/ A,திவுலபிட்டிய வீதி,மினுவங்கொட
வின்னர்ஸ் புத்தக நிலையம், இல 55, குருநாகலை வீதி, மினுவங்கொட.
ஆனந்தா புத்தக நிலையம் மற்றும் வெளியீடுகள், 54D, ரதவன வீதி, யக்கல.
மஹஜன புத்தக நிலையம், 6/A, கண்டி வீதி, கிரிபத்கொட.
டிஸ்னா புத்தக நிலையம், இல 23, சுப்பர்மார்கட் அப்ஸ்டயார்ஸ், நிட்டம்புவ
மின்சாரா பொத் மெதுர, இல 80, பௌத்தலோக மாவத்த, கம்பஹா.
மின்சாரா பொத் மெதுர, இல 84, டீ குறூஸ் வீதி, நீர்கொழும்பு.
மின்சாரா பொத் மெதுர, இல 154/2, கண்டி வீதி, கடவத்த
சமனல ரீட்ரய்ட் (பிறைவட்)லிமி., இல.968, கொழும்பு வீதி, கட்டுநாயக்க.
சமனல ரீட்ரய்ட் (பிறைவட்)லிமி., இல.169, கிரீன் வீதி, நீர்கொழும்பு.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 867, நீர்கொழும்பு வீதி, வத்தல.
சந்ரிக்கா புத்தக நிலையம், 53, நீர்கொழும்பு வீதி, வத்தல.

03. களுத்துறை - ஓகிட் என்டர்பிரைசஸ், 109, அங்குறுவத்தோட்ட வீதி, ஹொரணை.
விஜய புத்தக நிலையம், இல. 20, அளுத்கம வீதி, மத்துகம.

விஜய புத்தக நிலையம், இல. 54E , பிரதான வீதி, களுத்தறை தெற்கு.
லக் இசுறு (பிரைவேற்) லிமி., 324, பிரதான வீதி, பாணந்துறை.
நியு பிரதீபா புத்தக நிலையம், 51/C களுத்துறை வீதி, பண்டாரகம.
நியு நிபுன புத்தக நிலையம், 404, முச்சந்தி, காலி வீதி, களுத்துறை தெற்கு.
வாத்துவ புத்தக நிலையம், காலி வீதி, வாத்துவ.
லுமினேக்ஸ் கிரோசர்ஸ், (பிரைவேற்) லிமி., 465, காலி வீதி, பாணந்துறை.
கொடகே அன்ட் பிரதர்ஸ், 507, காலி வீதி, பாணந்துறை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 41, அங்கறுவத்தொட்ட வீதி, ஹோரன
விஜய பத்திரிகைக் கடை, இரத்தினபுரி வீதி, பதுரெலிய
சவிது புத்தகசாலை, இல.20, இரத்தினபுரி வீதி, இங்கிரிய
ரன்சிக்க புத்தகசாலை, 437/18, மதுகம வீதி, அம்பகா சந்தி, தர்கா நகர்.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 377 D காலி வீதி, பானந்துறை.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 92, காலி வீதி, களுத்தறை தெற்கு.
சரசி புத்தகசாலை, இல.05, காமினி வீதி, மதுகம
செய்தித்தாள் கடை, இல.03, தும்பிரியபொல வீதி, களுத்தறை தெற்கு.
காலி புத்தக நிலையம் மற்றும் வெளியீடுகள், இல.91, அங்குருவத்த வீதி, ஹோரன
உதயா காட்சிசாலை, பிரதான வீதி, இங்கிரிய
பத்மசிரி புத்தக நிலையம், இல.16, அகலவத்த வீதி, மதுகம.
ஜாமியா புத்தக நிலையம் & கொமியுனிகேசன், இல.10C, வத்தல்பொல வீதி,
ஹெனமுல்ல, பானந்துறை.
லுமினேக்ஸ் (பிறைவட்)லிமி, இல 232, பிரதான வீதி, களுத்தறை தெற்கு.
லுமினேக்ஸ் (பிறைவட்)லிமி, இல 416, காலி வீதி, பானந்துறை.
லுமினேக்ஸ் (பிறைவட்)லிமி, இல 144/B, இரத்தினபுரி வீதி, ஹோரன
லுமினேக்ஸ் (பிறைவட்)லிமி, இல 87, இன்னர் சேர்க்குனர் வீதி, களுத்தறை
மின்சார பொத் அநனரசய, , இல 55E , பிரதான வீதி, களுத்தறை
சரசவி புத்தக நிலையம் (பிறைவட்)லிமி, 169/1, பானந்துறை வீதி, ஹோரன

04. மாத்தளை - மாலக்க டிரேடர்ஸ் (பிரைவேற்) லிமி., 55/57, பிரதான வீதி, மாத்தளை.
அமரசிங்க அன்ட் சன்ஸ், இல.7, தம்புள்ள வீதி, மாத்தளை சந்தி, கலேவெல.
சுமக புத்தக நிலையம், 6, மாத்தளை வீதி, உக்குவளை.
புதிய ஜயதிஸ்ஸ புத்தக நிலையம், 469, குருனாகல சந்தி, தம்புள்ளை
புதிய ஜயதிஸ்ஸ புத்தக நிலையம், அனுராதபுர வீதி, தம்புள்ளை

05. கண்டி - விஜிதா யாபா புத்தக நிலையம், 05, கொட்டுகொடல்ல வீதி, கண்டி.
தவச பொத் மெதுர, இல. 12, நுவரெலியா வீதி, கம்பொல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., 86, டி.எஸ்.சேனநாயக்க வீதி, கண்டி.
ஹரிஸ்சந்திர புக் மெதுர, இல. 36, குறுக்கு வீதி, கண்டி.
லங்கா மத்திய புத்தகசாலை, 84, கொழும்பு வீதி, கண்டி.
சமுத்திர புத்தக நிலையம், இல 74, டி.எஸ்.சேனநாயக்க வீதி, கண்டி
சீவலி புத்தகசாலை, இல.16, யட்டினுவர வீதி, கண்டி.
விமர்ஷ்ஷி கல்வி வட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 21, லெவல் 2, கண்டி சிட்டி சென்டர், கண்டி.
K.M.A புத்தக நிலையம், 56, மாத்தளை வீதி, அக்குறனை.
ஈஸ்வரன் புத்தக நிலையம், 126/1, கொழும்பு வீதி, கண்டி.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 33, யட்டி நுவர வீதி, கண்டி.
விஜிதா யாபா புத்தக நிலையம், இல 20, 2ஆம் மாடி, கண்டி சிட்டி சென்டர், கண்டி.

06. நுவரெலியா - குமாரன்ஸ் டிரேட் (புக்ஸ்) சென்டர், 19, டெயிலி பெயார் கொம்ளெக்ஸ், கண்டி வீதி, நுவரெலியா.
நிஸான் புத்தக நிலையம், ரத்மெட்டிய வீதி, ரிகிலகஸ்கட.

சீப்சைட் புத்தக நிலையம், 40, கம்பொல வீதி, நாவலப்பிட்டி.
சமிலானி கொமியுனிகேசன், இல.01, பிரதான சந்தை, ஹங்குரன்கெத்த
சமகி புத்தக நிலையம், வைத்தியசாலை வீதி, ரிகிலகஸ்கட.
சுஜய் புத்தக நிலையம் அன்ட் கிரோசரி, இல 40, நில்தந்தாகின்ன.
சரசவி மின்உபகரணம் மற்றும் புத்தக நிலையம் இல 06, கண்டி வீதி, ரிகிலகஸ்கட

07. காலி - விஜிதா யாபா புத்தக நிலையம், இல. 12, வக்வெல்ல வீதி, காலி.
ஜி.எச்.ஆரியதாஸ புத்தக நிலையம், இல. 73, தங்கெதர தெரு, காலி.
ரோயல் புத்தகசாலை, 152, பிரதான வீதி, அம்பலாங்கொடை.
விதான புத்தக நிலையம், 04, பத்தேகம வீதி, வந்துரம்ப.
சேன புத்தக நிலையம், எல்பிட்டிய.
லஹிறு புத்தக நிலையம், பஸ்ஸார், 76, ஹவலொக் வீதி, காலி.
சமனல டிரேடர்ஸ் மற்றும் புத்தக நிலையம், கொழும்பு வீதி, நெலுவ.
கமகே புத்தக நிலையம், இல. 20, நாகொட வீதி, பத்தேகம.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., 1ஆவது மாடி, மத்திய பஸ் நிலையம், காலி.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., இல. 107, வெக்வெல்ல வீதி, காலி.
சமாரா கொமினியுகேசன், இல.76B, ஹவ்லொக் வீதி, காலி.
டயமன்ட் எட்வர்டய்சிங், இல.55 பஸ் தரிப்பிடக் கடைத் தொகுதி, அம்பலங்கொடை
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 02, மாத்தரை வீதி, காலி.
வெனச புத்தக நிலையம், கன்டேகொடவத்த, யக்கலமுல்ல, காலி.
லுமினெக்ஸ் புத்தக நிலையம், பிறைவட் லிமி, இல 98, காலி வீதி, அம்பலங்கொடை

08. மாத்தறை - எச்.பீ.எரமானிஸ் அப்புஹாமி அன்ட் சன்ஸ், 87, தர்மபால மாவத்தை, மாத்தறை.
வீரசிங்க புத்தக நிலையம், மாத்தறை வீதி, கம்புறுபிட்டய.
சரசவி புத்தக நிலைம் (பிரைவேட்) லிமி., 4, ஸ்டேசன் வீதி, மாத்தறை.
விஜிதா யாபா புத்தக நிலையம், 05A – 1/1, தர்மபால மாவத்தை, மாத்தறை.
விஜிதா யாபா புத்தக நிலையம், இல 10, ஹக்மான வீதி, மாத்தறை.
ஹமீம் புத்தக நிலையம், இல.7, பொரல வீதி, வெலிகம.
நியு பால ஸ்டோர்ஸ், இல.306, பழைய காலி வீதி, சாப்பு கடே, வெலிகம.
லஸ்ஸன புத்தக நிலையம், தெனியாய வீதி, மொரவக்க.
ஷஸ்ஸாகோ டேட்டா பியுரோ அன்ட் புக் ஷொப், 93, வேல்ட் மார்க்கட், அக்குரஸ்ஸ.
சமுத்ரா புத்தக நிலையம், 127, S.K.சினிமா கட்டிடம், தங்கல்ல வீதி, கொட்டுவேகொட, மாத்தறை.
சமுத்திர புத்தக நிலையம், இல 127, எஸ்.கே.சினிமா கட்டிடம், கொட்டுவேகொட,
அபேவிக்ரம புத்தக நிலையம், வீரகோன் வத்த, ஊறுபொக்க.
ரசிக்க புத்தக நிலையம், 50A, அக்குறஸ்ஸ வீதி, ராஹுல சந்தி, மாத்தறை.
Ebook city.lk, இல.100A கல்பொக்க வீதி, வெலிகம
சான் புத்தக நிலையம், இல 246, தர்மபால மாவத்தை, மாத்தறை.
சப்பிரி புத்தக நிலையம், இல 29, பாசல் மாவத்தை, கம்புருப்பிட்டிய
சுசர பதிப்பகம் (பிறைவட்)லிமி,இல14, ஆரியரத்ன கட்டிடம், ஹக்மான வீதி, மாத்தறை.
எம்.டீ.குணசேன& (பிறைவட்)லிமி, இல27, அனாகரீக தர்மபால மாவத்தை, மாத்தறை.
எச்.பீ.எரமானிஸ் அப்புஹாமி அன்ட் சன்ஸ், 107, ராகுல வீதி,, மாத்தறை.
விஷ்டம் புத்தக நிலையம், நகஹ சந்தி, ஊறுபொக்க.

09. ஹம்பாந்தோட்டை- முத்துமால புத்தக நிலையம், 117, பிரதான வீதி, தங்காலை.
எம்.ஏ.எஸ். டிரேடர்ஸ், 24, சுப்பர் மார்க்கட், வலஸ்முல்ல.
ருக்செவன பொத் மெதுர, 92, டிக்வெல வீதி, பெலியத்த.
ஜயசேகர பப்ளீஷர்ஸ், 92, பெலியத்த வீதி, தங்காலை.
பபசரா புத்தக நிலையம், 56, கொடபோவ, வீரகெட்டிய.

நியு சுமிஹிரி டிரேட் சென்டர், இல. 11, பிரதான வீதி, அம்பலந்தொட்ட.
நியு லஹிரு புத்தக நிலையம், இல. 562, ஹம்பந்தொட்ட வீதி, கங்கசிரிபுர, திஸ்ஸமஹாராம.
சரீனாஸ் கிரொசரி, மித்தெனிய வீதி, கொடபொ, வீரகெடிய
யனுலி புத்தக நிலையம் அன்ட் கொமினியுகேசன், இல10, ரன்னவீதி, அங்குனகொலபெலஸ.
அபயசிங்க புத்தக நிலையம், தலவா வீதி, மிடியெனிய.
சீவலி புத்தக நிலையம், பாடசாலை வீதி, சூரியவெவ நகரம்.

10. யாழ்ப்பாணம் - பூபாலசிங்கம் புத்தகசாலை, 04, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மெக்மிலன் புத்தக நிலையம், இல. 3, பஸ் தரிப்பு, யாழ்ப்பாணம்.
துர்க்கா ஸ்டேசனர்ஸ், பஸ் நிலையத்திற்கு அருகில், சுன்னாகம்.
அன்னை புத்தக டிப்போ, இல.7 Z, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

11. வவுனியா - இராமச்சந்திராஸ், 20A, பஸ் நிலைய தொகுதி, வவுனியா.

12. திருகோணமலை - ரெயின்போ மினி லாப் (பிரைவேற்) லிமி., 113, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.
சுர்பா கொமினியுகேசன் ஸ்டேசனரி அன்ட் மல்டி டிரேட்ஸ், 160, பிரதான வீதி, கிண்ணியா-3
சுர்பா கொமினியுகேசன் ஸ்டேசனரி அன்ட் மல்டி டிரேட்ஸ், பிரதான வீதி, மூதூர்
சுர்பா கொமினியுகேசன் ஸ்டேசனரி அன்ட் மல்டி டிரேட்ஸ், பிரதான வீதி, தோப்புர்
சுர்பா கொமினியுகேசன் ஸ்டேசனரி அன்ட் மல்டி டிரேட்ஸ், பிரதான வீதி, முல்லிப்பொத்தானை

13. மட்டக்களப்பு - ராஜாஸ் புத்தக நிலையம், 111, பிரதான வீதி, மட்டக்களப்பு.
நூரி புத்தக நிலையம், பிரதான வீதி, காத்தான்குடி.
R.D. புத்தக நிலையம், தங்கமணிப்பதி, இல 05, பிரதான வீதி, பெரியகல்லார் – 02 (30250), கல்லார்

14. அம்பாறை - போட்டோ ரியோ, 120A, பிரதான வீதி, கல்முனை.
சென்ரல் புத்தக நிலையம், பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று.
வெலிகம ஸ்டோர்ஸ், 4ஆம் ஒழுங்கை, அம்பாறை.
A 2 Z புத்தக நிலையம், 154, வைத்தியசாலை வீதி, நிந்தவுர் 15.
வேகா கொமியுனிகேசன், 130/3, பவுஸ் மாவத்தை, சம்மாந்துறை.
ப்ளஸ் கொம், 84/B/1, G.M.M.S. வீதி, சாய்ந்தமருது - 11.
மேகாலைன் மெகா புத்தக நிலையம் மற்றும் ஸ்டேசனரி, 53, பிரதான வீதி, கல்முனை.
டீ-லிங்க் கொமியுனிகேசன், மற்றும் ஸ்டேஷனரி, பிரதான வீதி, பாலமுனை.
சயான் புத்தக நிலையம், அம்பாறை வீதி, சம்மாந்துறை.
பிரசாட் புத்தக நிலையம், இல A10, புதிய நகர், தெகியத்தகண்டிய
சயான் புத்தக நிலையம், இல 116, பிலாவடி லான், சம்மாந்துறை.

15. புத்தளம் - சமந்தி புத்தக நிலையம், 39, மாரவில வீதி, நாத்தாண்டியா.
த பேப்பர் ஹவுஸ், 12, கொழும்பு வீதி, புத்தளம்.
சிலாப மயுர புத்தக நிலையம், 8, கொழும்பு வீதி, சிலாபம்.
அக்மினி புத்தக நிலையம், இல. 3/5, தனியார் பஸ் நிலையம், சிலாபம்
ரம்பசேவன புத்தக நிலையம், வென்னப்புவ.
A to Z புத்தக நிலையம், இல.230, மன்னார் வீதி, புத்தளம்.
ரெட்சி புத்தகசாலை, 02, மக்கள் வங்கி அண்மையில், நாத்தாண்டிய

சாகிர் பேன்சி கோனர் புத்தக நிலையம், இல 09, குருனாகல வீதி, புத்தளம்.

16. குருணாகல் - சமுத்ர புத்தக நிலையம், 10, புத்தளம் வீதி, குருணாகல்.
சமுத்ர புத்தக நிலையம், 8/2, மிகுந்து மாவத்தை, குருணாகல்.
சமுத்ர புக் கியுரியோ, இல 25/27, புத்தள வீதி, குருணாகல்.
சமுத்ர புத்தக நிலையம், இல 04, ராஜபில மாவத்தை, குருணாகல்.
சமுத்ர கொன்சோல்டேட்டட் (பிவிடி), 5, ஸவுத் சேர்குளர் வீதி, குருணாகல்.
காரீஸ் புத்தக நிலையம், 577, மீகஹாகொட்டுவ, குளியாபிட்டிய.
சரசவி பிரின்டா்ஸ் அன்ட் பப்ளீஷா்ஸ், 24, தம்புள்ள வீதி, குருணாகல்.
ரிச்சா்ட் டிரேடிங் கொம்பனி (பிரைவேற்) லிமி., 64, பரகும்பா வீதி, குருணாகல்.
சரசவி மாா்கட்டிங் என்டா்பிரைஸ், 135, கொழும்பு வீதி, குருணாகல்.
சத்துரங்க புத்தக நிலையம், இல. 60, குருணாகல் வீதி, பன்னல.
மிகிர புத்தக நிலையம், 41, சிலாப வீதி, வாரியபொல.
ரிடர்ஸ் புத்தக நிலையம், பஸ் நிலையத்திற்கு முன்னால், 184A, குருணாகல் வீதி, நாரம்மல
சமாதி புத்தக நிலையம், 7-8, புதிய பஸ் நிலையம், கல்கமுவ.
யச இசுறு டிரேட் சென்டர் புத்தக நிலையம், இல. 39, குளியாபிட்டிய வீதி, நாரம்மல.
பவித்ரா பொத்ஹல, பிரதான வீதி, மஹவ.
சம்பத் புத்தக நிலையம், 49, கொழும்பு வீதி, குருநாகல்.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., இல. 56, கொழும்பு வீதி, குருநாகல்.
ஹன்சித்த புத்தக நிலையம், 43/1, குருணாகல் வீதி, வாரியபொல.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 67, கொழும்பு வீதி, குருணாகல்.
குமுடித்த புத்தக நிலையம், 101/ C, புத்தளம் வீதி, நிக்கவரட்டிய.
ஹர்ச பிரிய புத்தக நிலையம், நீர்கொழும்பு வீதி, மாக்கந்துர, கொனாவில
சஞ்சீவ கொமியுனிகேசன் அன்ட் புத்தக நிலையம், இல 36, புதிய பஸ் நிலையம், குளியாபிட்டிய
மின்சர பொத் மெதுர, இல 7, ஆனந்த மாவத்த, குளியாபிட்டிய
சம்பத் புத்தக நிலையம், இல 24, கண்டி வீதி, குருணாகல்.
சமகி புத்தக நிலையம், பிரதான நகரச் சந்தி, கலிகமுவ.

17. அனுராதபுரம் - குணசேகர அன்ட் கோ, 234, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அனுராதபுரம்.
புத்திக புத்தக நிலையம், 282, பிரதான வீதி, பேங் பிளேஸ், அனுராதபுரம்.
சஞ்ஜீவ பாமஸி அன்ட் புக் ஷொப், இல. 136, பிரதான வீதி, கெகிராவ.
முத்துகுட பேப்பா் கோணா் அன்ட் பிரின்டா்ஸ், நியு டவுண், தம்புத்தேகம.
முத்துகுட பேப்பா் கோணா், இல.34, கெகிராவ வீதி, எப்பாவெல.
பேண்டா ஹவுஸ், தலாவ வீதி, எப்பாவல
சமுத்ரா கொன்சோல்டேட்டட் (பிவிடி), 56/248, நியு பஸ் நிலையம், அனுராதபுரம்.

18. பொலன்னறுவை - தீபானி புத்தகசாலை, 70, பொதுச் சந்தை, ஹிங்குரக்கொடை.
நியு தீபானி புத்தகசாலை, 125, டீ.எஸ். சேனநாயக்க வீதி, ஹிங்குரக்கொடை.
புவச புக் மெதுர, வைத்தியசாலை சந்தி, பொலன்னறுவை.
பேப்பா் லைட் புத்தக நிலையம், ஆஸ்பத்திரி வீதி, மெதிரிகிரிய.
பிரியங்கர புத்தக நிலையம், 09, பிரதான வீதி, கதுறுவல.
பிரசாட் புத்தகசாலை மற்றும் டிரேடர்ஸ், பாடசாலை சந்தி, மெதிரிகிரிய
நியு தீபானி புத்தகசாலை, தபால் மாவத்த, ஹிங்குரக்கொடை.
புவச புக் மெதுர், 27, பிரதான வீதி, கதுறுவல.

19. பதுளை - ஜான்ஸ் புத்தக நிலையம், 89, லோவா் வீதி, பதுளை.
ஈ.எம்.ஜீ. கருணாரத்ன புத்தக நிலையம், 58, தா்மவிஜய மாவத்தை, பண்டாரவெல.
இசுறு பெயாா், 80, நுவரெலியா வீதி, வெலிமட.
மகிந்தாஸ் புத்தக நிலையம், இல.50, 52, பஸாா் வீதி, பதுளை.

ரிஷானா பட மாளிகை, 380, பிரதான வீதி, பஸ்ஸர.
ஸ்ரீ மங்கள பப்ளிஷர்ஸ், 16, தர்மவிஜய மாவத்த, பண்டாரவல.
விக்ரிக் மல்டி சொப் (பிரைவேற்) லிமி., இல.04, புத்த மாந்திர் வீதி, வெலிமட.
செனல்நெட் புத்தகசாலை, இல.06, பதுளை வீதி, மகியங்கனய
விஜயவிக்ரம புத்தகசாலை இல 38, பதுளை வீதி, வெலிமட

20. மொனராகலை - மைசன் டிரேட் சென்டர், 26, பிரதான வீதி, மொனராகலை.
ஏ.டீ.எஸ். ஏஜென்சீஸ், இல. 14, பிரதான வீதி, பிபில.
தரிந்து கிப்ட் சென்ரர், 65, திஸ்ஸ வீதி, வெல்லவாய.
சுமதுர புத்தக நிலையம், 22, பொத்துவில் வீதி, மொனராகல.
சீ.ஜி.எம். பொத் மெதுர, 69, பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால், வெல்லவாய.
சுகத புத்தகசாலை, திஸ்ஸ வீதி, வெல்லவாய.

21. கேகாலை - ஸ்ரீலங்கா புத்தக நிலையம், 89, நீதிமன்ற சந்தி, கேகாலை.
தர்மவர்தன புத்தக நிலையம், பஸ் தரிப்பு, இல. 1, கீழ்த்தளம், அங்குறுவெல, றுவன்வெல.
லங்கா புத்தக நிலையம், 122, பிரதான வீதி, வறக்காபொல.
A J கொமியுனிகேசன் அன்ட் புத்தகசாலை, 21A, நீதிமன்ற வீதி, மாவனெல்ல.
ஜயந்தி புத்தக நிலையம், இல. 132, பிரதான வீதி, மாவனெல்ல.
கல்யானி புத்தக நிலையம், இல.44, பிரதான வீதி, ருவன்வெல்ல.
லங்கா புத்தக நிலையம், 50/10B, அங்குருவெல்ல வீதி, வரகாபொல
கங்கா புத்தக நிலையம், 121, கொழும்பு வீதி, வரகாபொல.

22. இரத்தினபுரி - கருணாரத்ன பிரதர்ஸ், 16, தேவாலய வீதி, இரத்தினபுரி.
ஜினசிறி டிரேட் சென்ரர், 96, பிரதான வீதி, பலாங்கொட.
சுமனகிரி டிரேட் சென்டர், பிரதான வீதி, எம்பிலிபிட்டிய.
சிங்கா பொத்மெதுர, பஸ் நிலையம், குருவிட்ட.
பத்மசிரி சுபர் சிட்டி, 54, மத்துகம வீதி, மனான, களவான.
குருளு புத்தக நிலையம் & கொமினியுகேசன், 79/G, பிரதான வீதி, பெல்மடுல்ல.
சமனல கொமியுனிகேசன் அன்ட் புத்தக நிலையம், இல 52, பிரதான வீதி, இடான்கொட, கிரிஎல்ல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., இல. 23/1, செனவிரத்ன கட்டிடம், முதலாம் மாடி, கொழும்பு வீதி, இரத்தினபுரி.
சுபசேகர ஸ்டோர்ஸ், 168A, பிரதான வீதி, கஹவத்த.
புத்திக ஏஜென்சீஸ் (பிரைவேட்) லிமி., இல.24, பஸ் நிலைய வீதி, இரத்தினபுரி.
சிஹின புத்தக நிலையம், பஸ் நிலைய வீதி, குருவிட்ட.
பிரதீபா புத்தக நிலையம், இல. 23/B, பிரதான வீதி, இஹலியகொட.
தேஜன் புத்தக மாளிகை, இல. 184A, பிரதான வீதி, கொடகாவெல.

23. கிளிநோச்சி அறிவுநதி புத்தக நிலையம், இல 06, கண்கபுரம் வீதி, கிளிநோச்சி

**20, வாட் பிளேஸ்,**
**கொழும்பு 07.**
**09.05.2025**